**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**Deposition of Witness – Crl. Misc. 39**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 562/2022**
**Deposition of Witness for : PW – 9 (பட்டியல் சாட்சி – 9).**
*** * * * * * ***

பெயர் : திரு. B.B. மணியன்.

நாள் : 04.08.2026.

நேரம் : 12.25 P.M.,

சாட்சி விசாரணையை காணொளி மூலம் நடத்துவதற்கு அரசுத் தரப்பில் மனுத் தாக்கல் செய்து, எதிரிகள் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் சாட்சி காணொளி மூலம் வரவழைக்கப்பட்டுள்ளார். அரசுத் தரப்பு வழக்கறிஞர் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் இல்லை. சாட்சியானவர் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கள்ளிமந்தையம் காவல் நிலையத்தில் உள்ள காணொளி அரங்கத்தில் அமர வைக்கப்பட்டு, சாட்சி காணொளி மூலம் நீதிமன்றத்திலுள்ள திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சியின் அருகில் காணொளிமூலம் விசாரணை செய்வதற்கு உதவியாக திருமதி.K.தேவதி, பெண் தலைமைக் காவலர் (168), கள்ளிமந்தையம் காவல் நிலையம், ஒட்டன்சத்திரம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் என்பவர் உள்ளார். சாட்சியின் அருகில் காணொளி மூலம் விசாரணை செய்வதற்கு உதவியாக திருமதி.M. வீரரம்யா, மேசை எழுத்தர் நிலை –III, நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி என்பவர் மூலம் பிரமாணம் செய்துவைக்கப்பட்டார். சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு சாட்சியின் அடையாளமும் உறுதிப்படுத்தப்பட்டபின் விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது.

2026 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 – ஆம் நாள் அரசுத் தரப்பு சாட்சியாகிய திரு.B.B. மணியன் என்பவரின் வாக்குமூலம் 1873 – ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 10–இன்படி சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(1, 2 ஆகிய எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சியானவர், காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).**

<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>

(1) நான் தற்போது, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சந்திரம் வட்டம், கள்ளிமந்தையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.04.2018 ஆம் தேதி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த மனு ரசீது எண். 109/2018–ஐப் பார்வையிட்டு, அதன் தன்மைக்கேற்ப அல்லிநகரம் காவல் நிலையக் குற்ற எண். 120/2018, சட்டப் பிரிவுகள் 294(b), 427, 506(ii) இ.த.ச.–வாக வழக்குப் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சிவக்குமார் மற்றும் முரளிதரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.

(2) பின்னர், சம்பவ சாட்சிகளான ரேவதி, சுரேஸ், காமாட்சி மற்றும் ஜெயலெட்சுமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், சம்பவம் உண்மையெயத் தெரியவரவே, எதிரிகளைத் தேடிவந்தபோது, 1–வது முத்துப்பாண்டி என்பவர் அன்றைய தினமே 12.30 மணிக்கு அல்லிநகரம் பஸ் ஸ்டாப்பில் வைத்து காரணம்கூறி, கைது செய்து, தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பிவைத்தேன். 2–வது எதிரி முன்பிணை பெற்றுவிட்டபடியால் அவரைக் கைது செய்யவில்லை. பின்னர், சாட்சி–1 இன் வீட்டுக் கதவை சரிசெய்து கொடுத்த குமார் என்பவரை விசாரித்து, சேத மதிப்புச் சான்று பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன்.

(3) பின்னர், இவ்வழக்கில் மனு ரசீது வழங்கிய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். பின்னர், இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து, மேற்படி 2 எதிரிகளுக்கும் எதிராக சட்டப் பிரிவுகள் 294(b), 427, 506(ii) இ.த.ச–இன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சியை, குறுக்கு விசாரணை செய்யப் போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும், சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே, குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது).

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.08.04 14:15:09 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**